உபகரணங்களுடன் சேர்த்து மின்சார விநியோகமுறைமை, நீர்விநியோக முறைமை உபகரணங்கள், தொலைத்தொடர்பாடல் உபகரணங்கள் மற்றும் குளிரூட்டி உபகரணங்கள் என்பவை உட்பட மேலே மேலும் விபரமாக குறிப்பீடுசெய்யப்பட்ட சொல்லப்பட்ட காணித்துண்டுக்கு தற்போது அல்லது இதனகத்துப்பின்னர் காலத்துக்குக்காலம் பொருத்தப்படக்கூடிய அல்லது நிரந்தரமாக இணைக்கப்படக்கூடிய சகல மற்றும் தனியான அசைவற்ற பொறித்தொகுதி மற்றும் எந்திரத்தொகுதி உபகரணங்கள் இணைப்புக்கள் பொருத்திகள் மற்றும் சேவைகள் என்பவற்றை உள்ளடக்கியது.

சபையின் கட்டளைப்படி,

சபையின் செயலாளர்,
தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீ.

10 - 653

கார்கில்ஸ் வங்கி பீஎல்சீ

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் கார்கில்ஸ் வங்கி பீஎல்சீ இன் பணிப்பாளர் சபையினால் ஏற்றங்கிகரிக்கப்பட்டதான தீர்மானம்

வாடிக்கையாளரின் பெயர் : விக்ரம ஆராச்சிகே உதித ஹர்ஷன விக்ரமசிங்க கிளை : சிலாபம்

28.09.2026 அன்று நடைபெற்ற பதிவு எண் PQ00293614 (முன்னர் பதிவு எண் PB 4847-ஐக் கொண்ட 'கார்கில்ஸ் வங்கி லிமிட்டெட் என்று அறியப்பட்டது) ஐக் கொண்ட கார்கில்ஸ் வங்கி பி.எல்.சி யின் (இதனகத்துப்பின்னர் சிலநேரங்களில் 'வங்கி' என்று குறிப்பிடப்படும்) பணிப்பாளர்கள் சபையின் கூட்டத்தில் பின்வரும் விஷேட தீர்மானம் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது:

கடப்பாட்டாளரான விக்ரம ஆராச்சிகே உதித ஹர்ஷன விக்ரமசிங்க அவர்கள் இலக்கம் 696, காலி வீதி, கொழும்பு 3 -இல் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தைக் கொண்ட வங்கிக்குச் சாதகமாக, 05/10/2020 திகதி 9196 ஆம் இலக்கத்திலும் 05/10/2020 திகதி 9198 ஆம் இலக்கத்திலும் மற்றும் 22/10/2022 திகதி 9491 ஆம் இலக்கத்திலும் இவை அனைத்தும் பிரசித்த நொத்தாரிசு ஏ.சி.எஸ். பெரேரா அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட ஈட்டு முறிகள் மூலம் ஈடு மற்றும் பிணையம் வைக்கப்பட்டதும், இதன்கீழ் முதலாம் மற்றும் இரண்டாம் ஆதன அட்டவணைகளில் நன்கு விவரிக்கப்பட்டுள்ளதுமான ஆதனங்களின் பிணையத்தின் மீது வழங்கப்பட்ட நிதி வசதிகளைத் மீளச்செலுத்துவதில், தவறியுள்ள நிலையில்;

மேலும், 30/06/2026 வரையிலான முதல் மற்றும் வட்டித் தொகையாகவும், அத்துடன் 01/07/2026 முதல் ரூபா 16,284,238.92 மீதான ஆண்டுக்கு 14.5% என்ற விகிதத்திலான வட்டியுடனும், கார்கில்ஸ் வங்கி பி.எல்.சி -க்குச் செலுத்தப்பட வேண்டிய தொகையாக பதினாறு மில்லியன் தொளாயிரத்து எழுபத்தொன்பது ஆயிரத்து நூற்று இருபத்தெட்டு ரூபாய் எழுபது சதம் (ரூபா 16,979,128.70) தற்போது நிலுவையில் உள்ளது;

மேலும், குறித்த இல. 9196, இல.9198 மற்றும் இல.9491 ஆகிய இலக்கங்களைக் கொண்ட ஈட்டு முறிகளின் அடிப்படையில், முழுமையாகச் செலுத்தப்படும் வரை ஒரு மில்லியன் பதினைந்தாயிரத்து தொளாயிரத்து இருபத்து மூன்று ரூபாய் எழுபத்தேழு சதம் (ரூபா 1,015,923.77) தொகையும் செலுத்தப்பட வேண்டியுள்ளது.

இதன் மூலம் தீர்மானிக்கப்படுவது:-

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ், ஹோமாகம, பனாகொட, சர்வோதய மாவத்தை, ஹைலெவல் வீதி, இலக்கம் 9-1 இல் அமைந்துள்ள உரிமம் பெற்ற ஏலமிடுபவரான சந்திமா பிரியதர்ஷனி கமகே அவர்களுக்கு, விக்ரம ஆராச்சிகே உதித ஹர்ஷன விக்ரமசிங்க எனும் கடப்பாட்டாளரால் 9196, 9198 மற்றும் 9491 ஆம் இலக்க ஈட்டு முறிகளின் மூலம் வங்கிக்கு ஈடு வைக்கப்பட்டதும், இதன் கீழ் விபரிக்கப்பட்டுள்ள முதலாம் மற்றும் இரண்டாம் ஆதன அட்டவணைகளில் நன்கு விவரிக்கப்பட்டுள்ளதுமான ஆதனங்களைப் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வதற்கும், அத்துடன், பதினேழு மில்லியன் தொள்ளாயிரத்து தொண்ணூற்றைந்து ஆயிரத்து ஐம்பத்திரண்டு ரூபாயும் நாற்பத்தேழு சதமும் (ரூபா 17,995,052.47) கொண்ட குறித்த தொகையையும்,

குறிப்பிட்ட திகதிகளிலிருந்து விற்பனைத் திகதி வரை அதற்கான வட்டியையும், மற்றும் மேற்படி சட்டத்தின் பிரிவு 13-இன் கீழ் அறவிடப்படக்கூடிய செலவுகள் மற்றும் பணத்தொகைகளையும் இதுவரை பெறப்பட்டுள்ள ஏதேனும் கொடுப்பனவுகளை (எதுமிருப்பின்) கழித்து மீளப்பெறுவதற்கும் அதிகாரம் அளிக்கப்படுகிறது.

மேலே குறிப்பிடப்பட்ட முதலாவது அட்டவணை

இல.9198 மற்றும் இல.9491- முறிகளின் அடிப்படையில்.

வடமேல் மாகாணம், புத்தளம் மாவட்டம், வடமேல் மாகாணம், புத்தளம் மாவட்டம், சிலாபம் பதிவுப் பிரிவுக்குள், பிடிகல் கோரளை வடக்கு, முன்னேஸ்வரம் பற்று, சிலாபம் பிரதேச செயலாளர் பிரிவு, சிலாபம் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட முகுனுவட்டவான கிராம சேவகர் பிரிவில் உள்ள முகுனுவட்டவான கிராமத்தில் அமைந்துள்ள முங்கண்டலுவ எஸ்டேட் மறு பெயர் முகுனுவட்டவான வத்த எனப்படும் நிலத்தில், உத்தரவு பெற்ற நில அளவையாளர் எம். கே.எம்.எஸ். பிரியங்கர வால் 15.07.2019 தயாரிக்கப்பட்ட படம் இல 7002-இல் துண்டு 01 எனக் குறிப்பிடப்பட்ட பிரித்து வரையறுக்கப்பட்ட ஒரு துண்டு காணி ; இதன் எல்லைள் : வடக்கே - உத்தரவு பெற்ற நில அளவையாளர் ஏ.ஜீ.எஸ்.பி. பராக்ரம அவர்களால் தயாரிக்கப்பட்ட படம் இல 616/B-இல் குறிப்பிடப்பட்ட 2ம் துண்டு காணி ; கிழக்கே -பிரதேச சபை வீதி; தெற்கே மேற்படி படம் இல 616/B-இல் குறிப்பிடப்பட்ட 2B ம் துண்டு காணி ; மேற்கே - உத்தரவு பெற்ற நில அளவையாளர் எச் எஸ் பெரேரா அவர்களால் தயாரிக்கப்பட்ட படம் இல. 84/1977-இல் குறிப்பிடப்பட்ட 3ம் துண்டு காணி . இதன் விஸ்தீரணம் இரண்டு ரூட் (A00-R02-P00) ஆகும்; இதில் உள்ள மண், பயிர்கள், கட்டிடங்கள் மற்றும் அதன் மீது அமைந்துள்ள அனைத்தும் உள்ளடங்கலாக; மேலும் இது சிலாபம் காணிப் பதிவகத்தில் A 142/114 என்ற தலைப்பின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

அத்துடன், உத்தரவு பெற்ற நில அளவையாளர் ஏ.ஜீ.எஸ். பி. பராக்ரம அவர்களால் 10.03.1984 திகதி தயாரிக்கப்பட்ட படம் இல 616/B-இல் குறிப்பிடப்பட்ட 2C ம் துண்டு காணியின் கிழக்கு எல்லைப் பகுதியில் அமைந்துள்ள வீதிக்கான ஒதுக்கப்பட்ட நிலப்பகுதியை பயன்படுத்தும் உரிமையும். வீதியாகப்

மேலே குறிப்பிடப்பட்ட இரண்டாவது அட்டவணை

இல.9196 முறியின் அடிப்படையில்.

வடமேல் மாகாணம், புத்தளம் மாவட்டம், சிலாபம் பதிவுப் பிரிவுக்குள், பிடிகல் கோரளை வடக்கு, யாகம் பற்று, சிலாபம் பிரதேச செயலாளர் பிரிவு, சிலாபம் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட 549 கொக்காவில் கிராம சேவகர் பிரிவில், கொக்காவில மற்றும் புளியங்கடவார கிராமங்களில் அமைந்துள்ள செல்வமின் எஸ்டேட் எனப்படும் நிலத்தில், உத்தரவு பெற்ற நில அளவையாளர் எஸ். ஸ்ரீதரன் வால் 18.03.2019 திகதி தயாரிக்கப்பட்ட படம் இல. 7870-இல் துண்டு 03 எனக் குறிப்பிடப்பட்ட பிரித்து வரையறுக்கப்பட்ட ஒரு துண்டு காணி; இதன் எல்லைகள்: வடக்கே - 01 மற்றும் 02 ஆம் துண்டு காணிகள்; கிழக்கே கபிலவின் காணியும் நிக்ளஸின் பின்னுரித்தாளர்களுக்கு சொந்தமான காணி; தெற்கே டாக்டர் பிரேமரத்னவின் பின்னுரித்தாளர்களுக்கு சொந்தமான காணியும், உத்தரவு பெற்ற நில அளவையாளர் எஸ். ஸ்ரீதரன் அவர்களால் தயாரிக்கப்பட்ட படம் இல, 6377-இல் குறிப்பிடப்பட்ட 02 ஆம் துண்டு காணியும்; மேற்கே - உத்தரவு பெற்ற நில அளவையாளர் எஸ். ஸ்ரீதரன் அவர்களால் தயாரிக்கப்பட்ட படம் இல. 6377-இல் குறிப்பிடப்பட்ட 02 ஆம் துண்டு காணியும், உத்தரவு பெற்ற நில அளவையாளர் எஸ். ஸ்ரீதரன் அவர்களால் தயாரிக்கப்பட்ட படம் இல. 6377-இல் 01 ஆம் துண்டு காணியாகக் குறிப்பிடப்பட்ட 12 அடி அகலமான பாதையும், 12 அடி அகலமான தனியார் வீதியும் ஆகும். இதன் விஸ்தீரணம் ஒரு ரூட் முப்பத்து நான்கு தசம் ஐந்து பேர்ச்சஸ் (A00-R01-P34.5) ஆகும்; இதில் உள்ள மண், பயிர்கள், கட்டிடங்கள் மற்றும் அதன் மீது அமைந்துள்ள அனைத்தும் உள்ளடங்கலாக; மேலும் இது சிலாபம் காணிப் பதிவகத்தில் A 138/42 என்ற தலைப்பின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

அத்துடன், உத்தரவு பெற்ற நில அளவையாளர் எஸ். ஸ்ரீதரன் அவர்களால் தயாரிக்கப்பட்ட படம் இல. 6377-இல் குறிப்பிடப்பட்ட 01 ஆம் துண்டுக் காணியாகக் குறிக்கப்பட்ட 12 அடி அகலமான வீதி ஒதுக்கீட்டின் மீதும், உத்தரவு பெற்ற நில அளவையாளர் எஸ். ஸ்ரீதரன் அவர்களால் தயாரிக்கப்பட்ட மேற்படி படம் இல. 7870-இல் காட்டப்பட்டுள்ள 12 அடி அகலமான தனியார் வீதியின் மீதும் வீதியாகப் பயன்படுத்தும் உரிமையும்.

பணிப்பாளர் சபையின் உத்தரவுப்படி,

சமில அபேசூரிய,
தலைவர் - மீளப்பெறுதல்.

10-730

பேன் ஏசியா பேங்கிங் கோப்பரேஷன் பி.எல்.சி.

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விஷேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் பேன் ஏசியா பேங்கிங் கோப்பரேஷன் பி.எல்.சி.ன் பணிப்பாளர் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்

வாடிக்கையாளர்களின் பெயர்கள் :- லெவ்கே பன்டாரகே தம்மிக பிரபாத்
கிளை :- வெலிகம

பின்வரும் தீர்மானமானது 23.09.2026ம் திகதி பேன் ஏசியா பேங்கிங் கோப்பரேஷன் பணிப்பாளர் சபையினால் விஷேடமாகவும், ஏகமனதாகவும் பி.எல்.சி.இன் தீர்மானிக்கப்பட்டது.

அதன்படி, "கடப்பாடுடையவர்களான / ஈடுவைத்தவர்களான" லெவ்கே பன்டாரகே தம்மிக பிரபாத் என்பவர் பதிவு இல. பீகியூ 48 ஐக் கொண்ட பேன் ஏசியா பேங்கிங் கோப்பரேஷன் பி.எல்.சி.இன் சார்பில் காலியைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு P.A.S.S.விஜேரத்ன அவர்களினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 25.06.2024ம் திகதிய முதன்மை மிதக்கும் ஈட்டுமுறி இல. 307, 27.08.2024ம் திகதிய இரண்டாம் நிலை ஈட்டுமுறி இல. 348 (காலியைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு P.A.S.S.விஜேரத்ன அவர்களினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 23.04.2025 திகதியிட்ட மூன்றாம் நிலை ஈட்டு முறி இலக்கம் 527 இற்கு உட்பட்டதாக) ஆகியவற்றின் மீதான வரவேண்டிய கொடுப்பனவுகளில் தவணை தவறியுள்ளனர்.

மேற்குறிப்பிடப்பட்ட பேன் ஏசியா பேங்கிங் கோப்பரேஷன் பி.எல்.சி.ற்கு (இதனகத்துப் பின்னர் சிலவேளைகளில் "வங்கி" என அடையாளம் காணப்படும்) 30.08.2026ம் திகதி வரையான முதன்மை பணத்தொகை மற்றும் வட்டியுடன் பெறவேண்டிய ரூபாய் எட்டு மில்லியன் எட்டு இலட்சத்து இருபத்தெட்டாயிரத்து தொள்ளாயிரத்து தொண்ணூற்றாறும் சதம் நாற்பத்தைந்து (ரூபா. 8,828,996.45) பணத்தொகையும் மற்றும் 31.08.2026ம் திகதியிலிருந்து ரூபாய் எட்டு மில்லியன் நான்கு இலட்சத்து இருபத்தையாயிரத்து ஐநூற்று முப்பத்து மூன்றும் சதம் ஒன்பது (ரூபா. 8,425,533.09) வரையான பணத்தொகைக்கு 16% வருடாந்த வட்டியுடனும் சொல்லப்பட்ட ஈட்டுமுறி இலக்கங்கள் 307 மற்றும் 348 ஆகியவற்றின் கொடுப்பனவுகளை முழுமையாக செலுத்தி முடிக்கும் வரை வரவேண்டியும் சேரவேண்டியும் உள்ளது.

இதன் மூலம் தீர்மானிக்கப்படுவதாவது:-

திகதியிலிருந்து வரை மேற்சொல்லப்பட்ட ஈடுவைத்தவரிடமிருந்து பெறவேண்டிய ரூபாய் எட்டு மில்லியன் எட்டு இலட்சத்து இருபத்தெட்டாயிரத்து தொள்ளாயிரத்து தொண்ணூற்றாறும் சதம் நாற்பத்தைந்து (. 8,828,996.45) எனும் முழுப்பணத்தொகை மற்றும் மேற்சொல்லப்பட்ட ஏலவிற்பனை திகதி மேற்குறிப்பிட்டப்பட்டுள்ளபடி வட்டியும், 1990 ஆம் ஆண்டின் 4ம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விஷேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 13 ஆம் பிரிவின் கீழ் அறவிட வேண்டிய பணத்தொகை மற்றும் செலவுகள் அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்டுள்ளதன் அடிப்படையில் வங்கியில் ஈடுவைக்கப்பட்டுள்ள ஆதனத்தை பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்ய 1990ஆம் ஆண்டின் 4ம் இலக்க, வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விஷேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4ஆம் பிரிவின் பிரகாரம் கொலன்னாவை, விஹார மாவத்தை, இல.182/3 (50/3) ஐச் சேர்ந்த உரிமம் பெற்ற ஏலதாரர் துசித கருணாரத்ன என்பவருக்கு அதிகாரமும் தத்துவமும் அளிக்கின்றதென இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.

மேற்கூறப்பட்ட ஆதனத்தின் அட்டவணை

தென் மாகாணம், மாத்தறை மாவட்டம், வெலிகம கோரளை, வெலிகம பிரதேச சபை எல்லைக்குள், வெலிகம பிரதேச செயலாளர் பிரிவில், குருபெபில கிராம அலுவலர் பிரிவில், மிதிகமவில் அமைந்துள்ள வரிப்பண இல. 21, 21 2/1, 23 மற்றும் 23 1/1 காலி வீதி, தெல்கஹகொரட்டுவ, கும்பல்கம, வெலிகமயில் அமைந்துள்ள மாத்தறை மாவட்ட நீதிமன்றத்தின் வழக்கு இலக்கம் P825 இன் பதிவேட்டில் இணைக்கப்பட்டுள்ள வரைபடத்தில் காண்பிக்கப்பட்டுள்ள C என அடையாளமிடப்பட்டுள்ள "தெல்கஹகொரட்டுவ' என்றழைக்கப்படும் காணியும் அதனுள்ளடங்கும் மரங்கள், பயிர்ச்செய்கைகள், கட்டிடங்கள், சொத்துக்கள், நிரந்தரப் பொருத்துதல்கள், இயந்திரங்கள் மற்றும் சகலதும் உரிமம் பெற்ற நில அளவையாளர் ஜோன் டி சில்வா, அவர்களால் தயாரிக்கப்பட்ட 04.07.1958ம் திகதிய 671ம் இலக்க வரைபடத்தில் குறிக்கப்பட்டுள்ள ஒன்றிணைக்கப்பட்ட லொட் 7 மற்றும் 8 ஆகிய காணித்துண்டுகள், உரிமம் பெற்ற நில அளவையாளர் S.சமரசிங்க அவர்களால் தயாரிக்கப்பட்ட 16.05.2000ம் திகதிய 759A இலக்க வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள லொட் 1, 2, 3, 4, 5, 6 மற்றும் 7ம் இலக்க பிரித்தெடுக்கப்பட்டு எல்லைகள் வரையறுக்கப்பட்டதுமான தொடர் காணித்துண்டுகளின் எல்லைகளாவன: வடக்கு: காலியிலிருந்து வெலிகமவுக்குச் செல்லும் பிரதான வீதி கிழக்கு: வீதி மற்றும் தும்முனியமுல்லேவத்த தெற்கு: அதே காணியின் D காணித்துண்டு மேற்கு: மாத்தறை மாவட்ட நீதிமன்றத்தின் வழக்கு இலக்கம் P825 இல் இணைக்கப்பட்டுள்ள 671ம் இலக்க வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள லொட் 6 மேற்படி 759A இலக்க வரைபடத்தின் பிரகாரம், இக்காணியின் மொத்த விஸ்தீரணம் இருபத்தாறு தசம் ஆறு ஒன்பது பர்ச்சஸ் (ஏ:00-றூ:00-பர்:26.69) ஆகும். இக்காணி மாத்தறை காணிப் பதிவகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மிக அண்மையில் மேற்கொள்ளப்பட்ட அளவையின் பிரகாரம் மேற்படி காணி பின்வருமாறு விபரிக்கப்படுகின்றது:

C என தென் மாகாணம், மாத்தறை மாவட்டம், வெலிகம கோரளை, வெலிகம பிரதேச சபை எல்லைக்குள், வெலிகம பிரதேச செயலாளர் பிரிவில், குருபெபில கிராம அலுவலர் பிரிவில், மிதிகமவில் அமைந்துள்ள வரிப்பண இல. 21, 21 2/1, 23 மற்றும் 23 1/1 காலி வீதி, தெல்கஹகொரட்டுவ, கும்பல்கம, வெலிகமயில் அமைந்துள்ள மாத்தறை மாவட்ட நீதிமன்றத்தின் வழக்கு இலக்கம் P825 இன் பதிவேட்டில் இணைக்கப்பட்டுள்ள வரைபடத்தில் குறிக்கப்பட்டுள்ள அடையாளமிட்ட "தெல்கஹகொரட்டுவ" என்றழைக்கப்படும் காணியும் அதனுள்ளடங்கும் மரங்கள், பயிர்ச்செய்கைகள், கட்டிடங்கள், சொத்துக்கள், நிரந்தரப் பொருத்துதல்கள், இயந்திரங்கள் மற்றும் சகலதும் உரிமம் பெற்ற நில அளவையாளர் S.சமரசிங்க அவர்களால் தயாரிக்கப்பட்ட 22.12.2005ஆம் திகதிய 1859ம் இலக்க வரைபடத்தில் எனக் குறிக்கப்பட்ட பிரித்தெடுக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும், உரிமம் பெற்ற நில அளவையாளர் S.சமரசிங்க

அவர்களால் தயாரிக்கப்பட்ட 16.05.2000ஆம் திகதிய 759A இலக்க வரைபடத்தில் குறிக்கப்பட்ட லொட் 2, 3, 4, 6 மற்றும் 7 ஆகிய காணித்துண்டுகளை ஒன்றிணைத்ததன் மூலம் உருவாக்கப்பட்டதாகும். மேற்படி இலக்கம் 759A வரைபடமானது உரிமம் பெற்ற நில அளவையாளர் ஜோன் டி சில்வா, அவர்களால் தயாரிக்கப்பட்ட 04.07.1958 திகதிய 671 இலக்கம் வரைபடத்தில் குறிக்கப்பட்டுள்ள லொட் 7 மற்றும் 8 ஆகிய காணித்துண்டுகளை ஒன்றிணைத்ததன் மூலம் உருவாக்கப்பட்டதாகும். மேற்கூறப்பட்ட லொட் A இன் எல்லைகளாவன: வடக்கு: காலியிலிருந்து மாத்தறைக்குச் செல்லும் பிரதான வீதி கிழக்கு: வீதி

மற்றும் தும்முனியமுல்லேவத்த தெற்கு: அதே காணியின் D காணித்துண்டு மேற்கு: மாத்தறை மாவட்ட நீதிமன்றத்தின் வழக்கு இலக்கம் P825 இல் குறிப்பிடப்பட்டுள்ள 671ம் இலக்க வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள லொட் 6 மேற்படி 1859 இலக்க வரைபடத்தின் பிரகாரம் இக்காணியின் மொத்த விஸ்தீரணம் இருபத்தாறு தசம் மூன்று பர்ச்சஸ் (ஏ:00-றூ:00-பர்:26.3) ஆகும்.

மேற்படி காணியானது பின்வரும் இரண்டு காணிகளையும் ஒன்றிணைத்ததன் மூலம் உருவாக்கப்பட்டதாகும்:

1. தென் மாகாணம், மாத்தறை மாவட்டம், வெலிகம கோரளை, வெலிகம பிரதேச சபை எல்லைக்குள், வெலிகம பிரதேச செயலாளர் பிரிவில், குருபெபில கிராம அலுவலர் பிரிவில், மிதிகமவில் அமைந்துள்ள மாத்தறை மாவட்ட நீதிமன்றத்தின் வழக்கு இலக்கம் P825 இன் பதிவேட்டில் இணைக்கப்பட்டுள்ள C என அடையாளமிடப்பட்ட "தெல்கஹகொரட்டுவ" என்றழைக்கப்படும் காணித்துண்டு உரிமம் பெற்ற நிலஅளவையாளர் ஜோன் டி சில்வா அவர்களால் தயாரிக்கப்பட்ட 04.07.1958 திகததிய 671ம் இலக்க வரைபடத்தில் லொட் 7 என அடையாளமிடப்பட்ட காணித்துண்டும் அதனுள்ளடங்கும் மரங்கள், பயிர்ச்செய்கைகள், கட்டிடங்கள் மற்றும் சகலதுமாகும். மேற்படி 7 ஆம் இலக்கக் காணித்துண்டின் எல்லைகளாவன: வடக்கு: பிரதான வீதி மற்றும் அதே காணியின் லொட் 8 கிழக்கு: அதே காணியின் லொட் 8, வீதி மற்றும் தும்முனியமுல்லேவத்த தெற்கு; அதே காணியின் லொட் D மேற்கு: அதே காணியின் லொட் 6, மேற்படி இலக்கம் 671 கொண்ட வரைபடத்தின் பிரகாரம் இக்காணியின் விஸ்தீரணம் இருபத்திரண்டு பர்ச்சஸ் (ஏ:00-றூ:00 -பர்:22) ஆகும். மேற்படி காணி மாத்தறை காணிப் பதிவகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

2. தென் மாகாணம், மாத்தறை மாவட்டம், வெலிகம கோரளை, வெலிகம பிரதேச சபை எல்லைக்குள், வெலிகம பிரதேச செயலாளர் பிரிவில், குருபெபில கிராம அலுவலர் பிரிவில், மிதிகமவில் அமைந்துள்ள மாத்தறை மாவட்ட நீதிமன்றத்தின் வழக்கு இலக்கம் P825 இன் பதிவேட்டில் இணைக்கப்பட்டுள்ள C என அடையாளமிடப்பட்ட "தெல்கஹகொரட்டுவ" என்றழைக்கப்படும் காணித்துண்டு உரிமம் பெற்ற நிலஅளவையாளர் ஜோன் டி சில்வா அவர்களால் தயாரிக்கப்பட்ட 04.07.1958 திகததிய 671ம் இலக்க வரைபடத்தில் லொட் 61601 அடையாளமிடப்பட்ட காணித்துண்டும் அதனுள்ளடங்கும் மரங்கள், பயிர்ச்செய்கைகள், கட்டிடங்கள் மற்றும் சகலதுமாகும். மேற்படி 7 ஆம் இலக்கக் காணித்துண்டின் எல்லைகளாவன: வடக்கு: அதே காணியின் லொட் 7 மற்றும் காலி-மாத்தறை பிரதான வீதி கிழக்கு: வீதி மற்றும் தும்முனியமுல்லேவத்த தெற்கு: அதே காணியின் லொட் 7 மேற்கு: அதே காணியின் லொட் 7, மேற்படி இலக்கம் 671 கொண்ட வரைபடத்தின் பிரகாரம் இக்காணியின் விஸ்தீரணம் நான்கு பர்ச்சஸ் (ஏ:00-றூ:00-பர்:4) ஆகும். மேற்படி காணி மாத்தறை 8 பதிவகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. காணிப்

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

அருன குருகே,
முகாமையாளர் அறவிடுதல்.

10 - 700

ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சி

1990ம் ஆண்டின் 4ம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் மீளப்பெறல் (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டத்தின் பிரிவு 4 இன் கீழ் ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சி யின் இயக்குனர் சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தீர்மானம்

ஜோன் போல் இருகல்பண்டாரகே கொவின் வத்சுக இருகல்பண்டார
M/S இம்பீரியல் ஓட்டோ கெயார் நிறுவனத்தின் தனி உரிமையாளர்

2026 அன்று ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சி இயக்குனர் சபையினால், 4 செப்டம்பர் இடம்பெற்ற கூட்டத்தில் விசேடமாகவும் ஏகமனதாகவும் எடுக்கப்பட்ட தீர்மானம்.

அதாவது கடனாளியான M/S இம்பீரியல் ஓட்டோ கெயார் நிறுவனத்தின் தனி உரிமையாளரான ஜோன் போல் இருகல்பண்டாரகே கொவின் வத்சுக இருகல்பண்டார மற்றும் அடமானக் கடனாளியான குணசேகர என்ற இயற்பெயர் கொண்ட பரனமன்னகே தரங்கி புகுஷ்ரணி மேகஹல இருகல்பண்டார ஆகிய இருவரும், இத்துடன் இணைக்கப்பட்டுள்ள அட்டவணையில் மேலும் முழுமையாக விவரிக்கப்பட்டுள்ள சொத்து மற்றும் வளாகத்தின் பாதுகாப்பிற்கு எதிராக அடமானமாகவும் மற்றும் உத்தரவாதமாக வைத்து, நொத்தாரிசு எஸ். எஸ்.

திசாநாயக்க அவர்களால் சான்றளிக்கப்பட்ட 09.03.2022 திகதியிடப்பட்ட முறி இலக்கம் 151 அடமான பத்திரத்தின் மூலம், நிறுவனப் பதிவு இல.PQ 82 மற்றும் பதிவு செய்யப்பட்ட அலுவலக இல.479 டி.பி.ஜெயா மாவத்தை, கொழும்பு 10இல் அமைந்துள்ள ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி நிறுவனத்தால் வழங்கப்பட்ட கடன் வசதியை மீளச் செலுத்துவதற்கு தவறியுள்ளனர்.

மேலும் மேற்கூறப்பட்ட ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி நிறுவனத்திற்கு சார்பாக முறி இலக்கம் 151இன் கீழ், 09 ஜூன் 2026 திகதியன்று நிலுவையிலுள்ள மற்றும் செலுத்தப்பட வேண்டியுள்ள மொத்த தொகை இலங்கை சட்டப்பூர்வமான நாணயமான ரூபா 23,985,468.35 (இருபத்து மூன்று மில்லியன் தொன்னூற்று எண்பத்தையாயிரத்து நானூற்று அறுபத்தெட்டு ரூபாய் மற்றும் முப்பத்தைந்து சதம் மட்டும்) மேற்படி, அடமானப் பத்திரத்தின் கீழ் நிலுவையிலுள்ள மொத்த தொகை என்பதுடன் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி இயக்குநர் சபையானது 1990 ஆம் ஆண்டு 4ف இலக்க வங்கிகளினால் கடன் மீளப்பெறுதல் (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டத்தின்படி வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் கீழ் மேற்கூறப்பட்ட கடன் வசதிக்கான பாதுகாப்பிற்காக, மேற்கூறப்பட்ட முறி இலக்கம் 151இன் கீழ், ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி நிறுவனத்திற்கு அடமானம் வைக்கப்பட்டுள்ள, இத்துடன் இணைக்கப்பட்டுள்ள அட்டவணையில் மேலும் முழுமையாக விவரிக்கப்பட்டுள்ள சொத்து மற்றும் வளாகமானது, இலங்கை சட்டப்பூர்வமான நாணயமான ரூபா 23,985,468.35 (இருபத்து மூன்று மில்லியன் தொன்னூற்று எண்பத்தையாயிரத்து நானூற்று அறுபத்தெட்டு ரூபாய் மற்றும் முப்பத்தைந்து சதம் மட்டும்) நிலுவை தொகையை மீட்டெடுப்பதற்காகவும், அத்துடன் மேற்கூறப்பட்ட முறி இலக்கம் 151 இன் கீழ், ரூபா 17,046,000.00 கொண்ட தவணைக்கடன் I (Term Loan I) வசதிக்காக மீதியுள்ள மூலதனத் தொகையான ரூபா 15,416,000.00 (பதினைந்து மில்லியன் நானூற்று பதினாறாயிரம் ரூபாய் மட்டும்) தொகைக்கு 10 ஜூன் 2026 திகதி முதல் AWPLR + 3% வருடாந்த வட்டி வீதத்துடனும் மற்றும் ரூபா 5,726,000.00 கொண்ட தவணைக்கடன் II (Term Loan II) வசதிக்காக மீதியுள்ள மூலதனத் தொகையான ரூபா 5,276,000.00 (ஐந்து மில்லியன் இருநூற்று எழுபத்தாறாயிரம் ரூபாய் மட்டும்) தொகைக்கு 10 ஜூன் 2026 திகதி முதல் 12% வருடாந்த வட்டி வீதத்துடனும் நிலுவையிலுள்ள மொத்த தொகை முழுமையாக செலுத்தப்படும் வரை விளம்பர செலவுகள் மற்றும் பிற கட்டணங்கள் சேர்த்து பெறப்பட்ட கொடுப்பனவுகள் (ஏதுமிருப்பின்) கழித்து அறவிடுவதற்காக உரிமம் பெற்ற ஏலதாரரான ஜே.டபிள்யூ.ஈ. ஜெயவர்தன என்பவரால் பொது ஏலத்தில் விற்கப்படும் என தீர்மானிக்கப்படுகின்றது

மேலே குறிப்பிட்டுள்ளதற்கு அமைவாக அட்டவணை

தென் மாகாணம், ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் மேகம் பத்துவினைச் சேர்ந்த திஸ்ஸமஹாராம பிரதேசசபை எல்லைக்குட்பட்ட திஸ்ஸமஹாராம பிரதேச செயலகப்பிரிவில் காவந்தீஸ்சபுர கிராம உத்தியோகத்தர் பிரிவிற்குள் அமைந்துள்ள போகஹ-பலஸ்ஸ, குங்கும்பியகந்த என்னுமிடத்தில் அமைந்துள்ள, தலைமை நில அளவையாளரால் (Surveyor General) சான்றளிக்கப்பட்ட அ.யு.பி 2 ஆம் இலக்க வரைபட திட்டத்தில் குறிக்கப்பட்டுள்ள காணியுடனான கட்டிடங்கள் மற்றும் அதிலுள்ள அனைத்தும் அடங்கிய காணித்துண்டு 907 என அடையாளமிடப்பட்ட நிலத்தின் பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட பகிரப்பட்ட காணியின் எல்லைகள் குறிக்கப்பட்டுள்ளதுடன் மேற்கூறப்பட்ட காணித்துண்டு 907 ஆனது வடக்கில்: காணித்துண்டு 902 கிழக்கில்: ஒதுக்கீடு செய்யப்பட்ட பிரதான வீதி தெற்கில்: காணித்துண்டு 908 மேற்கில்: காணித்துண்டு 945 ஆகியவற்றை எல்லைகளாகவும் மேற்கூறப்பட்ட வரைபட திட்ட இல. அ.பு.பி 2 இன் படி, ஒரு ஏக்கர், மூன்று ரூட், இருபத்தாறு பேர்ச் (01ஏ, 03ரூ, 26பே) விஸ்தீரணத்தையும் கொண்டுள்ளது.

அத்துடன்தலைமைநிலஅளவையாளரால்சான்றளிக்கப்பட்ட வரைபட திட்ட இல. அபு.பி 2 இல் குறிப்பிடப்பட்டுள்ள வழி உரிமைகளுடனும் அமைந்துள்ளது.

இயக்குனர் சபை உத்தரவிற்கமைய,

ஷிரோமி ஹல்லோலுவ,
சபை செயலாளர்.

10 - 649/1

ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி

1990 ஆம் ஆண்டு 4ம் இலக்க வங்கிகளினால் கடன்கள் மீளப்பெறல் (சிறப்பு ஏற்பாடு) சட்டத்தின் பிரிவு 4இன் கீழ் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி யின் இயக்குனர் சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தீர்மானம்.

நாவல அதிகாரிகே அன்டன் குரேரா
மற்றும்
கிரிஹெட்டி ஹென்ரிட்டா தமயந்தி லியனகே

ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி இயக்குனர் சபையினால் 4 செப்டம்பர் 2026 அன்று இடம்பெற்ற கூட்டத்தில் விசேடமாகவும் ஒருமனதாகவும் எடுக்கப்பட்ட தீர்மானம்.

அதேசமயம், கடனாளியான நாவல அதிகாரிகே அன்டன் குரேரா மற்றும் கிரிஹெட்டி ஹென்ரிட்டா தமயந்தி லியனகே, இத்துடன் இணைக்கப்பட்டுள்ள அட்டவணையில் மேலும் முழுமையாக விபரிக்கப்பட்டுள்ள சொத்து மற்றும் வளாகத்தின் பாதுகாப்பிற்கு எதிராக அடமானமாகவும் மற்றும் உத்தரவாதமாக வைத்து, நொத்தாரிசு ஜி.எம்.எம். பெர்னாண்டோ அவர்களால் சான்றளிக்கப்பட்ட 15.02.2017 திகதியிடப்பட்ட முறி இலக்கம் 5728 அடமான பத்திரத்தின் மூலம், நிறுவனப் பதிவு இல.PQ 82 மற்றும் பதிவு

செய்யப்பட்ட அலுவலக இல.479 டி.பி.ஜெய மாவத்தை, கொழும்பு- 10 இல் அமைந்துள்ள ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி நிறுவனத்திற்கு சார்பாக வழங்கிய கடன் வசதியை மீள செலுத்துவதில் தவறியுள்ளார்.

மற்றும் மேற்கூறப்பட்ட ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி நிறுவனத்திற்கு சார்பாக முறி இலக்கம் 5728 இன் கீழ், தற்போது 25 மே 2026 திகதியன்று நிலுவையிலுள்ள மற்றும் செலுத்தப்பட வேண்டியுள்ள மொத்த தொகை இலங்கை சட்டப்பூர்வமான நாணயமான ரூபா 17,994,033.87 (பதினேழு மில்லியன் தொள்ளாயிரத்து தொண்ணூற்று நான்காயிரத்து முப்பத்து மூன்று ரூபாய் எண்பத்தேழு சதம்) தொகையானது மேற்படி, அடமானப் பத்திரத்தின் கீழ் நிலுவையிலுள்ள மொத்த தொகையாகும், மற்றும் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி இயக்குனர் சபையானது 1990 ஆம் ஆண்டு 4ம் இலக்க வங்கிகளினால் கடன் மீளப்பெறுதல் (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டத்தின்படி வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் கீழ் மேற்கூறப்பட்ட கடன் வசதிக்கான பாதுகாப்பிற்காக, மேற்கூறப்பட்ட முறி இலக்கம் 5728 இன் கீழ், ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி நிறுவனத்திற்கு அடமானம் வைக்கப்பட்டுள்ள, இத்துடன் இணைக்கப்பட்டுள்ள அட்டவணையில் மேலும் முழுமையாக விபரிக்கப்பட்டுள்ள சொத்து மற்றும் வளாகமானது. இலங்கை சட்டப்பூர்வமான நாணயமான ரூபா 17,994,033.87 (பதினேழு மில்லியன் தொள்ளாயிரத்து தொண்ணூற்று நான்காயிரத்து முப்பத்து மூன்று ரூபாய் எண்பத்தேழு சதம்) நிலுவை தொகையை மீட்டெடுப்பதற்காகவும், அத்துடன் மேற்கூறப்பட்ட முறி இலக்கம் 5728 இன் கீழ், 26 L 2026 திகதி முதல் பதினொன்று மில்லியன் ஐந்நூற்று இருபதாயிரம் ரூபாய் (ரூபா 11,520.000.00) தொகைக்கு, மேலும் வட்டி விகிதம் 15.5% வருடாந்த வட்டி விகிதத்துடன் நிலுவையிலுள்ள மொத்த தொகை முழுமையாக செலுத்தப்படும் வரை, மேலதிக வட்டியுடன், விளம்பர செலவுகள் மற்றும் ஏனைய செலவீனங்களுடனும், பெறப்பட்ட கொடுப்பனவுகள் (எவையேனும் இருப்பின்) கழித்து அறவிடுவதற்காக உரிமம் பெற்ற பி.கே.ஈ.சேனாபதியினால் பொது ஏலத்தில் விற்கப்படும் என தீர்மானிக்கபடுகின்றது. ஏலதாரான

மேலே குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணைக்கு அமைவாக

மேல் மாகாணம் (நீர்கொழும்பு பதிவுப்பிரிவுக்குட்பட்ட), கம்பஹா மாவட்டத்தில் அலுத்குரு கோரளையின் துனகஹ பட்டுவில், கட்டான பிரதேசசபையின் கட்டான உப அலுவலகப்பிரிவு எல்லைக்குட்பட்ட கட்டான பிரதேச செயலகப்பிரிவில் 70-பஹல கந்தவல கிராம உத்தியோகஸ்தர் பிரிவின் பஹல கந்தவல கிராமத்தில் அமைந்துள்ள ஹொரகஹலந்தகேபெல்ல, கோரக்கஹவடுகபெல்ல, ஹொரகஹலந்த, கோரக்கஹவத்த மற்றும் ஹொரகஹவத்த என்று அழைக்கப்படும் காணியுடனான கட்டிடங்கள் மற்றும் அதனோடு தொடர்புடைய அனைத்தும் உரிமம் பெற்ற நில அளவையாளர் பி.என்.கொடிகார அவர்களால் 19.10.2011 திகதியிடப்பட்ட வரைப்பட திட்ட இல.435இல் குறிக்கப்பட்டுள்ள காணித்துண்டு A என அடையாளமிடப்பட்ட நிலத்தின் பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட பகிரப்பட்ட காணியின் எல்லைகள் குறிக்கப்பட்டுள்ளது. அதன்படி, வடக்கில் ரணவீரு ஹேரத் மாவத்தை மற்றும் உரிமம் பெற்ற நில அளவையாளர் பி.என்.கொடிகார அவர்களால் 08.11.2010 திகதியிடப்பட்ட வரைப்பட திட்ட இல.332இல் குறிக்கப்பட்டுள்ள காணித்துண்டு A, கிழக்கில் உரிமம் பெற்ற நில அளவையாளர் பி.என்.கொடிகார அவர்களால் 08.11.2010 திகதியிடப்பட்ட வரைப்பட திட்ட இல.332இல் குறிக்கப்பட்டுள்ள காணித்துண்டு A மற்றும் எம்.நிமல் ரூபசிங்க, டினுஷா சுதர்ஷினி மற்றும் ஏனையோரால் உரிமைகோரப்படும் நிலம், தெற்கில் ஜே.ஏ.டோனா சுனிதாவினால் உரிமைகோரப்படும் நிலம், மேற்கில் ஜே.ஏ.டொன் ஜூட் நிமல்சிறியினால் உரிமைகோரப்படும் நிலம், குறிக்கப்பட்டுள்ளதற்கு அமைவாக ஒரு ஏக்கர் இருபத்தைந்து தசம் மூன்று பூச்சியம் பேர்ச் (ஏ1,ரூ0, பே25.30) விஸ்தீரணத்தை கொண்டுள்ளது.

இயக்குனர் சபை உத்தரவிற்கமைய,

ஷிரோமி ஹல்லோலுவ,
சபை செயலாளர்.

10-649/2

ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சி

1990ம் ஆண்டின் 4ம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் மீளப்பெறல் (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டத்தின் பிரிவு 4 இன் கீழ் ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சி யின் இயக்குனர் சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தீரமானம்

மகாமாலகே திலக் ஜயத்து பெர்னாண்டோ
மற்றும்
குருநாகே மேரி தனுஜா காஞ்சனா பெரேரா ஜயாஸ் டிரேடிங் கன்சர்ன் பங்குதாரர்கள்

ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சி இயக்குனர் சபையினால் 4 செப்டம்பர் 2026 அன்று இடம்பெற்ற கூட்டத்தில் விசேடமாகவும் ஏகமனதாகவும் எடுக்கப்பட்ட தீர்மானம்.

கடனாளிகளான ஜயாஸ் டிரேடிங் கன்சர்ன் பங்குதாரர்களான மகாமாலகே திலக் ஜயத்து பெர்னாண்டோ மற்றும் குருநாகே மேரி தனுஜா காஞ்சனா பெரேரா ஆகியோர், இத்துடன் இணைக்கப்பட்டுள்ள அட்டவணைகளில் மேலும் முழுமையாக விபரிக்கப்பட்டுள்ள சொத்துக்கள் மற்றும் வளாகத்தின் பாதுகாப்பிற்கு எதிராக மேற்கூறப்பட்ட மகாமாலகே திலக் ஜயத்து பெர்னாண்டோ என்பவரால் அடமானமாகவும் மற்றும் உத்தரவாதமாக வைத்து, நொத்தாரிசு எம் டீ ஏ எல் சமரதிவாக்கர அவர்களால் சான்றளிக்கப்பட்ட 11.06.2025 திகதியிடப்பட்ட முறி இலக்கம் 1515. 12.12.2025 திகதியிடப்பட்ட முறி இலக்கம் 1626, நொத்தாரிசு எண் Fig I வெட்ட அவர்களால்

சான்றளிக்கப்பட்ட 1,06.2025 திகதியிடப்பட்ட முறி இலக்கம் 1516, நொத்தாரிசு எம் டீ ஏ எல் சமரதிவாக்கர அவர்களால் சான்றளிக்கப்பட்ட 12.12.2025 திகதியிடப்பட்ட முறி இலக்கம் 1627, 11.06.2025 திகதியிடப்பட்ட முறி இலக்கம் 1517 மற்றும் 12.12.2025 திகதியிடப்பட்ட முறி இலக்கம் 1628 ஆகிய அடமான பத்திரங்களின் மூலம், நிறுவனப் பதிவு இல. PQ 82 மற்றும் பதிவு செய்யப்பட்ட அலுவலக இல. 479, டி. பி. ஜெயா மாவத்தை, கொழும்பு 10 இல் அமைந்துள்ள ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி நிறுவனத்தால் வழங்கப்பட்ட கடன் வசதியை மீளச் செலுத்துவதற்கு தவறியுள்ளனர்.

மேலும் மேற்கூறப்பட்ட ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல். சி நிறுவனத்திற்கு சார்பாக முறி இலக்கங்கள் 1515, 1626, 1516, 1627, 1517 மற்றும் 1628 இன் கீழ், தற்போது 14 மே 2026 திகதியன்று நிலுவையிலுள்ள மற்றும் செலுத்தப்பட வேண்டியுள்ள மொத்த தொகை இலங்கை சட்டப்பூர்வமான நாணயமான ரூபா 386,454,735.38 (முந்நூற்று எண்பத்தாறு மில்லியன் நானூற்று ஐம்பத்து நான்காயிரத்து எழுநூற்று முப்பத்தைந்து ரூபாய் மற்றும் முப்பத்தெட்டு சதம் மட்டும்) மேற்படி கடன் வசதியில் நிலுவையிலுள்ள மொத்த தொகை என்பதுடன், ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல். சி இயக்குநர் சபையானது 1990 ஆம் ஆண்டு 4ம் இலக்க வங்கிகளினால் கடன் மீளப்பெறுதல் (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டத்தின்படி வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் கீழ் மேற்கூறப்பட்ட கடன் வசதிக்கான பாதுகாப்பிற்காக, மேற்கூறப்பட்ட முறி இலக்கங்கள் 1515, 1626, 1516, 1627, 1517 மற்றும் 1628 இன் கீழ் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி நிறுவனத்திற்கு அடமானம் வைக்கப்பட்டுள்ள, இத்துடன் இணைக்கப்பட்டுள்ள அட்டவணைகளில் மேலும் முழுமையாக விபரிக்கப்பட்டுள்ள சொத்துக்கள் மற்றும் வளாகமானது, இலங்கை சட்டப்பூர்வமான நாணயமான ரூபா 386,454,735.38 (முந்நூற்று எண்பத்தாறு மில்லியன் நானூற்று ஐம்பத்து நான்காயிரத்து எழுநூற்று முப்பத்தைந்து ரூபாய் மற்றும் முப்பத்தெட்டு சதம் மட்டும்) நிலுவை தொகையை மீட்டெடுப்பதற்காகவும், அத்துடன் 15 மே 2026 திகதி முதல் ரூபா 371,400,000.00 (முந்நூற்று எழுபத்தொரு மில்லியன் நானூறாயிரம் ரூபாய் மட்டும்)

தொகைக்கு ஆரம்ப 12 மாதங்களுக்கு ஆண்டிற்கு 10% வருடாந்த வட்டி வீதத்துடனும் மற்றும் அதனைத் தொடர்ந்து AWPLR + 2% வருடாந்த வட்டி வீதத்துடனும் நிலுவையிலுள்ள மொத்த தொகை முழுமையாக செலுத்தப்படும் வரை மேற்கூறப்பட்ட முறி இலக்கங்கள் 1515, 1626, 1516, 1627, 1517 மற்றும் 1628 இன்படி விளம்பர செலவுகள் மற்றும் பிற கட்டணங்கள் சேர்த்து பெறப்பட்ட கொடுப்பனவுகள் (எவையேனும் இருப்பின்) கழித்து அறவிடுவதற்காக உரிமம் பெற்ற ஏலதாரரான கே பீ என் சில்வா என்பவரால் பொது ஏலத்தில் விற்கப்படும் என தீர்மானிக்கப்படுகின்றது.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள முதலாவது அட்டவணை

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில் சல்பிட்டி கோறளையின் பள்ளே பத்துவினைச் சேர்ந்த கொழும்பு மாநகரசபை எல்லைக்குட்பட்ட கொழும்பு பிரதேச செயலகப்பிரிவில் கோட்டை கிராம உத்தியோகத்தர் பிரிவிற்குள் அமைந்திருக்கும் புறக்கோட்டையில், சீனா ஒழுங்கை, மதிப்பீட்டு இலக்கங்கள் 15 மற்றும் 15 1/1 இல் அமைந்திருக்கும் காணியில், உரிமம் பெற்ற நில அளவையாளர் ஈ எம் அந்தோனிஸ் அவர்களால் 12 மே 1941 திகதியிடப்பட்டு தயாரிக்கப்பட்ட 3761 ஆம் இலக்க வரைபட திட்டத்தில் குறிக்கப்பட்டுள்ள நிலத்தின் பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட காணியும் அதிலுள்ள கட்டிடங்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய அனைத்தையும் உள்ளடக்கி வடக்கில்: பேங்க்ஷால் வீதியிலுள்ள மதிப்பீட்டு இலக்கங்கள் 218 மற்றும் 220 கொண்ட வளாகங்கள் கிழக்கில்: சீன ஒழுங்கையிலுள்ள மதிப்பீட்டு இலக்கம் 19 கொண்ட வளாகம் தெற்கில்: சீன ஒழுங்கை மேற்கில்: சீன ஒழுங்கையிலுள்ள மதிப்பீட்டு இலக்கம் 11 கொண்ட வளாகம் ஆகியவற்றைக் எல்லைகளாகக் கொண்டு மேற்கூறப்பட்ட வரைபட திட்ட இல. 3761 இன் படி, ஐந்து பேர்ச் மற்றும் ஒரு பேர்ச்சின் நூறில் எழுபத்தெட்டு பங்கு (00ஏ,00ரூபா 05 78/100பே) விஸ்தீரணத்தைக் கொண்டுள்ளது.

மேற்கூறப்பட்ட சொத்தானது மிகவும் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட அளவீட்டின்படி பின்வருமாறு விபரிக்கப்படலாம்:-

உரிமம் பெற்ற நில அளவையாளர் எல் பீ ஏ சாந்த பிரிய பெரேரா அவர்களால் 2 பெப்ரவரி 2003 திகதியிடப்பட்டு தயாரிக்கப்பட்ட 7561 ஆம் இலக்க வரைபட திட்டத்தில் குறிக்கப்பட்டுள்ள. புறக்கோட்டையில் சீன ஒழுங்கை, மதிப்பீட்டு இலக்கங்கள் 15 மற்றும் 15 1/1 இல் அமைந்திருக்கும் காணியும் அதிலுள்ள கட்டிடங்கள் மற்றும் அனைத்தையும் உள்ளடக்கிய நிலத்தின் பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட காணியின் எல்லைகளாக வடக்கில்: பேங்க்ஷால் வீதியிலுள்ள மதிப்பீட்டு இலக்கங்கள் 218 மற்றும் 220 கொண்ட வளாகம் கிழக்கில்: சீன ஒழுங்கையிலுள்ள மதிப்பீட்டு இலக்கம் 11 கொண்ட வளாகம் தெற்கில்: சீன ஒழுங்கை மேற்கில்: சீன ஒழுங்கையிலுள்ள மதிப்பீட்டு இலக்கம் 11 கொண்ட வளாகம் ஆகியவற்றுடன் மேற்கூறப்பட்ட வரைபட திட்ட இல. 7561 இன் படி, ஐந்து தசம் ஏழு எட்டு பேர்ச் (00ஏ, 00ரூ, 05.78பே) விஸ்தீரணத்தைக் கொண்டுள்ளது.

மேற்கூறப்பட்ட சொத்தானது மிகவும் அண்மையில் விபரிக்கப்படலாம்:-மேற்கொள்ளப்பட்ட பின்வருமாறு

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில் சல்பிட்டி கோறளையின் பள்ளே பத்துவினைச் சேர்ந்த கொழும்பு மாநகரசபை எல்லைக்குட்பட்ட 20 ஆம் வட்டாரம் சீன ஒழுங்கையில் கோட்டை கிராம உத்தியோகத்தர் பிரிவிற்குள் அமைந்திருக்கும் புறக்கோட்டை, சீன ஒழுங்கையில் அமைந்துள்ள (உரிமம் பெற்ற நில அளவையாளர் கே ஈ ஜெ பி பெரேரா அவர்களால் 02 பெப்ரவரி 2003 திகதியிடப்பட்ட வரைபட திட்ட இலக்கம் 7561 இல் குறிக்கப்பட்டுள்ள காணியின் மறு அளவீடு), மதிப்பீட்டு இலக்கங்கள் 15

மற்றும் 15 1/1, சீன ஒழுங்கை காணியில், உரிமம் பெற்ற நில அளவையாளர் எல் பீ ஏ சாந்த பிரிய பெரேரா அவர்களால் 11 டிசம்பர் 2019 திகதியிடப்பட்டு தயாரிக்கப்பட்ட 5345 ஆம் இலக்க வரைபட திட்டத்தில் குறிக்கப்பட்டுள்ள காணித்துண்டு 1 என அடையாளமிடப்பட்ட நிலத்தின் பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட காணியும் அதிலுள்ள கட்டிடங்கள் மற்றும் அனைத்தையும் உள்ளடக்கி வடக்கில்: பேங்க்ஷால் வீதியிலுள்ள மதிப்பீட்டு இலக்கங்கள் 218 மற்றும் 220 கொண்ட வளாகம் மற்றும் சீன ஒழுங்கை இலக்கம் 11 கொண்ட வளாகம் கிழக்கில்: சீன ஒழுங்கையிலுள்ள மதிப்பீட்டு இலக்கம் 19 இன் வளாகம் தெற்கில்: சீன ஒழுங்கை (நகரசபை) மற்றும் சீன ஒழுங்கையிலுள்ள மதிப்பீட்டு இலக்கம் 11 கொண்ட வளாகம் மேற்கில்: சீன ஒழுங்கையிலுள்ள மதிப்பீட்டு இலக்கம் 11 கொண்ட வளாகம் ஆகியவற்றை எல்லைகளாகக் கொண்டு மேற்கூறப்பட்ட வரைபட திட்ட இல. 5345 இன் படி, ஐந்து தசம் ஏழு எட்டு பேர்ச் (00ஏ, 00ரூ, 05.78பே) விஸ்தீரணத்தைக் கொண்டுள்ளது.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள இரண்டாவது அட்டவணை

1. மேல் மாகாணம், கம்பஹா மாவட்டத்தில் (நீர்கொழும்பு பதிவுப் பிரிவிற்குள்) அலுத்கூறு கோறளையின் ராகம் பத்துவினைச் சேர்ந்த வத்தளை பிரதேச சபையின் பமுனுகம உப அலுவலக எல்லைக்குட்பட்ட வத்தளை பிரதேச செயலகப்பிரிவில் 193ஏ தெலத்துர கிழக்கு கிராம உத்தியோகத்தர் பிரிவிற்குள் அமைந்திருக்கும் தெலத்துரவில் அமைந்துள்ள, "பதுல்லகஹவத்தை கொட்டச, மெதகொடவத்தை கும்புர, மெதகொடவத்தை கும்புருகட்டிய" என அழைக்கப்பட்ட மற்றும் தற்போது "அம்பகஹவத்தை" என அமைந்துள்ள மற்றும் அழைக்கப்படும் காணியில் இருந்து, உரிமம் பெற்ற நில அளவையாளர் எல் பீ ஏ எஸ் பீ பெரேரா அவர்களால் 18 ஜூலை 2019 திகதியிடப்பட்டு தயாரிக்கப்பட்ட 5205 ஆம் இலக்க வரைபட திட்டத்தில் குறிக்கப்பட்டுள்ள காணித்துண்டு 1 என அடையாளமிடப்பட்ட நிலத்தின் பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட காணியும் அதிலுள்ள கட்டிடங்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய அனைத்தையும் உள்ளடக்கி வடக்கில்: வீதி (RDA) மற்றும் கே பீ பெரேரா என்பவரால் உரிமை கோரப்படும் காணி கிழக்கில்: கே வீ ஆர் பெரேரா என்பவரால் உரிமை கோரப்படும் காணி மற்றும் இங்குள்ள காணித்துண்டு 2 இன் பி ரொட்ரிகோ என்பவரால் உரிமை கோரப்படும் காணி தெற்கில்: இங்குள்ள காணித்துண்டு 2 மற்றும் கே ஆர் பெரேரா மற்றும் ஏனையோரால் உரிமை கோரப்படும் காணி மேற்கில்: கே பீ பெரேரா மற்றும் ஏனையோரால் உரிமை கோரப்படும் காணி மற்றும் வீதி (RDA) ஆகியவற்றை எல்லைகளாகக் கொண்டு மேற்கூறப்பட்ட வரைபட திட்ட இல. 5205 இன் படி, ஒரு ஏக்கர் மற்றும் இருபத்தொன்பது தசம் மூன்று பேர்ச்(01ஏ, 00ரூ, 29.3பே) விஸ்தீரணத்தைக் கொண்டுள்ளது.

2. மேல் மாகாணம், கம்பஹா மாவட்டத்தில் (நீர்கொழும்பு பதிவுப் பிரிவிற்குள்) அலுத்கூறு கோறளையின் ராகம் பத்துவினைச் சேர்ந்த வத்தளை பிரதேச சபையின் பமுனுகம உப அலுவலக எல்லைக்குட்பட்ட வத்தளை பிரதேச செயலகப்பிரிவில் 193ஏ தெலத்துர கிழக்கு கிராம உத்தியோகத்தர் பிரிவிற்குள் அமைந்திருக்கும் தெலத்துரவில் அமைந்துள்ள, "பதுல்லகஹவத்தை கொட்டச, மெதகொடவத்தை கும்புர, மெதகொடவத்தை கும்புருகட்டிய" என அழைக்கப்பட்ட மற்றும் தற்போது "அம்பகஹவத்தை" என அமைந்துள்ள மற்றும் அழைக்கப்படும் காணியில் இருந்து, உரிமம் பெற்ற நில அளவையாளர எல் பீ ஏ எஸ் பீ பெரேரா அவர்களால் 18 ஜூலை 2019 திகதியிடப்பட்டு தயாரிக்கப்பட்ட 5205 ஆம் இலக்க வரைபட திட்டத்தில் குறிக்கப்பட்டுள்ள காணித்துண்டு 2 என அடையாளமிடப்பட்ட நிலத்தின் பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட காணியும் அதிலுள்ள கட்டிடங்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய அனைத்தையும் உள்ளடக்கி

வடக்கில்: இங்குள்ள காணித்துண்டு 1 மற்றும் கே பீ பெரேரா என்பவரால் உரிமை கோரப்படும் காணி கிழக்கில்: பி ரொட்ரிகோ என்பவரால் உரிமை கோரப்படும் காணி தெற்கில்: கே ஆர் பெரேரா மற்றும் ஏனையோரால் உரிமை கோரப்படும் காணி மேற்கில்: கே ஆர் பெரேரா மற்றும் ஏனையோரால் உரிமை கோரப்படும் காணி மற்றும் இங்குள்ள காணித்துண்டு 1 ஆகியவற்றை எல்லைகளாகக் கொண்டு மேற்கூறப்பட்ட வரைபட திட்ட இல. 5205 இன் படி, ஒரு ரூட் மற்றும் இருபத்தேழு தசம் ஒன்பது பேர்ச் (00ஏ 01ரூ, 27.9பே) விஸ்தீரணத்தைக் கொண்டுள்ளது.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள மூன்றாவது அட்டவணை

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டத்தில் அலுத்கூறு கோறளையின் ராகம் பத்துவினைச் சேர்ந்த வத்தளை பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட வத்தளை பிரதேச செயலகப்பிரிவில் 166ஏ குஞ்சாவத்தை கிராம உத்தியோகத்தர் பிரிவிற்குள் அமைந்திருக்கும் நுகபேவில், நுகபே வீதி, தற்போது மதிப்பீட்டு இலக்கம் 261/16 இல் அமைந்திருக்கும் "கெபெல்லகஹ ஓவிட்ட, கும்புகஹ ஓவிட்ட மற்றும் கும்புகஹவத்தை" என அழைக்கப்படும் காணியில் இருந்து, உரிமம் பெற்ற நில அளவையாளர் டபிள்யு எஸ் எஸ் பெரேரா அவர்களால் 04 செப்டம்பர் 1998 திகதியிடப்பட்டு தயாரிக்கப்பட்ட 3778 ஆம் இலக்க வரைபட திட்டத்தில் குறிக்கப்பட்டுள்ள காணித்துண்டுகள் 39 மற்றும் 40 எனக் குறிக்கப்பட்ட அடுத்துள்ள நிலங்களின் பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட காணியும் அதிலுள்ள கட்டிடங்கள் மற்றும் மற்றும் அதனுடன் தொடர்புடைய அனைத்தையும் உள்ளடக்கி வடக்கில்: காணித்துண்டு 50 (ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள 20 அடி அகல வீதி) மற்றும் காணித்துண்டு 38 கிழக்கில்: ஹென்றி பெரேராவின் முத்துராஜவெல தெற்கில்: டி ஜெ ஏ சுனில் ரொட்ரிகோ என்பவரின் காணி மேற்கில்: காணித்துண்டுகள் 41 மற்றும் காணித்துண்டு 50 (ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள 20 அடி அகல வீதி) ஆகியவற்றை எல்லைகளாகக் கொண்டு மேற்கூறப்பட்ட வரைபட திட்ட இல. 3778 இல் உரிமம் பெற்ற நில அளவையாளர் டபிள்யு எஸ் எஸ் பெரேரா அவர்களால்

13.07.2004 ஆம் திகதியிடப்பட்ட மேற்குறிப்பின்படி, இருபத்து நான்கு தசம் ஐந்து பூச்சியம் பேர்ச் (00ஏ. 00ரூபா 24.50பே) விஸ்தீரணத்தைக் கொண்டுள்ளது.

மேற்கூறப்பட்ட சொத்தானது மிகவும் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட அளவீட்டின்படி பின்வருமாறு விபரிக்கப்படலாம்:-

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டத்தில் அலுத்கூறு கோறளையின் ராகம் பத்துவினைச் சேர்ந்த வத்தளை பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட வத்தளை பிரதேச செயலகப்பிரிவில் 166 குஞ்சாவத்தை கிராம உத்தியோகத்தர் பிரிவிற்குள் அமைந்திருக்கும் நுகபேவில், நுகபே வீதி, தற்போது மதிப்பீட்டு இலக்கம் 261/16 இல் அமைந்திருக்கும் "கெபெல்லகஹ ஓவிட்ட, கும்புகஹ ஓவிட்ட மற்றும் கும்புகஹவத்தை" என அழைக்கப்படும் காணியில் இருந்து, உரிமம் பெற்ற நில அளவையாளர் எல் பீ ஏ எஸ் பீ பெரேரா அவர்களால் 08 அக்டோபர் 2019 திகதியிடப்பட்டு தயாரிக்கப்பட்ட 5309 ஆம் இலக்க வரைபட திட்டத்தில் குறிக்கப்பட்டுள்ளகாணித்துண்டு1எனஅடையாளமிடப்பட்ட நிலத்தின் பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட காணியும் அதிலுள்ள கட்டிடங்கள் மற்றும் மற்றும் அதனுடன் தொடர்புடைய அனைத்தையும் உள்ளடக்கி வடக்கில்: வீதி (பிரதேச சபை) மற்றும் மேற்கூறப்பட்ட வரைபட திட்ட இல. 3778 இல் உள்ள காணித்துண்டு 38 கிழக்கில்: ஹென்றி பெரேரா என்பவரால் உரிமை கோரப்படும் காணி தெற்கில்: டி டீ ஏ சுனில் ரொட்ரிகோ என்பவரால் உரிமை கோரப்படும் காணி மேற்கில்: மேற்கூறப்பட்ட வரைபட திட்ட இல. 3778 இல் உள்ள காணித்துண்டு 41 மற்றும் வீதி (பிரதேச சபை) ஆகியவற்றை எல்லைகளாகக் கொண்டு மேற்கூறப்பட்ட வரைபட திட்ட இல. 5309 இன் படி, இருபத்து மூன்று தசம் எட்டு பேர்ச் (00ஏ, 00ரூ, 23.8பே) விஸ்தீரணத்தைக் கொண்டுள்ளது.

அத்துடன் உரிமம் பெற்ற நில அளவையாளர் டபிள்யு எஸ் எஸ் பெரேரா அவர்களால் 04 செப்டம்பர் 1998 திகதியிடப்பட்டு தயாரிக்கப்பட்ட 3778 ஆம் இலக்க வரைபட திட்டத்தில் குறிக்கப்பட்டுள்ள காணித்துண்டு 50 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள 20 அடி அகல வீதியின் மீதும் மற்றும் அதன் வழியேயும் செல்வதற்கான பாதை உரிமையுடனும் சேர்த்து விபரிக்கப்பட்டுள்ளது.

இயக்குனர் சபை உத்தரவிற்கமைய,

ஷிரோமி ஹல்லோலுவ,
சபை செயலாளர்.

10 - 649/3